பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிளநூலகம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பிரதேசபார்ரியா
தெய்வரி இரவகஞ்சிய
LOOL ஏப்ரல் 21
செய்திகள், கட்டுரைகள், கவிதைகள்
அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதினக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 3 - 1 - 1997 இதழ்: 1

இறைவனைச் சாராத சக்திகளை நாடுவதனால் தான் இன்று எம்மை இருள் சூழ்ந்துள்ளது

இந்த மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு உசன் பாலர் பராமரிப்பு நிலைய ஒளிவிழாவில் சபை ஊழியன் அருட்திரு. பென்ஜமின் ஜெயராஜா உரையாற்றும் போது மேற்படி குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில்:-

"வாழ்க்கை ஏனோ தானோ என்று நினைந்து இந்த பாரம்பரிய பிரதேசங்களை விட்டு ஓ – முற்படுகின்றோம். இதற்கு அவசியமே இல்லை. சிறு பிள்ளைகள் தமது தேவைகள் அனைத்துக்கும் முற்று முழுதாக பெற்றோரை நாடி நிறைவேற்றுவது போல நாமும் ஒளியாகிய இறைமகன் இயேசுவை நாடி முற்று முழுதாக நமது தேவைகளை நிறைவேற்றுவார் என்று நம்பவேண்டும். இதனை நிறைவேற்ற வேண்டிய கடமை கிறிஸ்தவ சமுதாயத்துக்கு உண்டு. இதனால் எமது இருள் அகல அதனைக் கண்டு சமுதாயத்திலுள்ள ஏனையோர் ஒளியைத் தேடி வருவார்கள். இதனால் இருளிற்கு காரணமான சாத்தானின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க முடியும். இறைவனைச் சாராத சக்தியினால் பல தீமைகள் நிலவுவதனால், மக்கள் அறியாமை இருளில் வாழ்வதனால் அதிலிருந்து மக்களை விடுவிக்க முடியும் இதனால் கிறிஸ்து அனைவருக்கும் ஒளியாகத் திகழுவார். இந்த ஒளிவிழாவின் உள்ளான அர்த்தமும் இதுவே" எனக் கூறிப்பிட்டார்.

வாழ்க பல்லாண்டு

உதய தாரகையே உந்தன்
உதயத்தில் பிறந்தது ஈழத்தின் தமிழ்
பத்திரிகை உலகம் — தொடர்ந்து நீ
பல்லெடுங்காலம் வாழ்ந்திடல் வேண்டும்!
நூற்றைம்பத்தேழு ஆண்டு முதிர்ந்த உனை
நூதனமான வளர்ச்சியும்
மாறாத இளமையுடன் திகழும்
மாயம் தான் என்னே!
தேவ மைந்தன் புகழுடன்
தேசத்து செய்தியெல்லாம் நீ
செப்பிடும் அழகே தனி
செந்தமிழுடன் ஆங்கிலமும் சேர்ந்தே
தந்திடும் வித்தை தான் என்னே!
தகவலுக்கு மட்டுமென்று நில்லாது
சகலருக்கும் அறிவொளி பரப்ப!,
சத்தியமாய் நீ செய்யும் பணி புனிதமானது
நிச்சயமுண்டு — தேவ ஆசி உனக்கு,
நிரந்தரமாய் என்றும் உண்டுனக்கு!

திருமதி S. A. சிகாமணி

எந்தன் நாய்க்குட்டி

சின்ன எந்தன் நாய்க்குட்டி
சிவந்த நிற நாய்க்குட்டி
வாலை ஆட்டி என் அரவை
வகையாய் வரவேற்கும் நாய்க்குட்டி
தப்பி தவறி வரும் அறியாதவரை
தாவிப் பாய்ந்து கடித்திடுமே!
"சுவீட்டி" என்றிடும் போது
சுழண்டு ஓடி வந்து என்தன்
மடிதனிலே துள்ளி பாய்ந்து ஏறி
மகிழ்வாய் அமர்ந்திடும் நாய்க்குட்டி
பாய்ந்து வரும் பந்தினை
பாங்காய் வாயினுள் கௌவியே
விளையாடிடும் எந்தன் நாய்க்குட்டி
விசுகோத்துடன் பாலையும் விரும்பியே உண்டு
களிப்புடன் காவல் காத்திடும் அதற்கு
நிகராய் எது உண்டு பாரினிலே
நிச்சயம் எதுவுமில்லை இப் பாரினிலே

திருமதி S. A. சிகாமணி

157 வருடங்களுக்கு முன்

உதயதாரகை

இப் பத்திரிகை ஆரம்பத்தில், மாதத்தின் முதலாவது வியாழக் கிழமையும், மூன்றாவது வியாழக் கிழமையும் வெளிவந்தது.

கூடுதலாக கிறிஸ்தவ மதச் சிந்தனைகளைக் கொண்டதாய் காணப்பட்ட போதிலும். ஏனைய சமயத்தவர்களும், தமது கருத்துக்களை தெரிவிக்கவும், தமக்கு இருக்கும் சந்தேகங்களை, வினாக்களாக எழுப்பவும், அதற்கு விடை கூறுவதாயும், செயற்பட்டதைக் காணமுடிகின்றது.

இதில் பிரசுரிக்கப்பட்ட கடிதங்களைப் பார்க்கும்போது, இதன் உண்மை தெளிவாக தெரிகின்றது. இக் கடிதங்கள் கூறும் கதைகள், காத்திரமானவை, படிப்பதற்கு சுவையானவையும், சுவாரிசமானவையுமாகும்.

ஈழத்தின் பழமையைப் புரட்டிப் பார்ப்பதற்கு, பேணப்படவேண்டியவற்றில் இதுகும் ஒன்றாகும். ஏனெனில், இக் கடிதங்கள், அக்கால மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், அவர்கள் பிரச்சினைகள், சிந்தனை ஓட்டங்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டும் ஒன்றாக காணப்படுகிறது.

முக்கியமாக சமயச்சிந்தனைகள், கருத்துக்கள், பரவுவதற்கு, இக் கடிதங்கள், பத்திராதிபரிக்கும், வாசகனுக்கும் இடையில், ஓர் இணைக்கும் பாலமாக இருந்து. வந்ததை தெளிவாக காணமுடிகிறது.

(தொடரும்)

தற்கால சூழ்நிலைக்கு ஏற்ற பணிகள் அவசியம்

இந்த மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை உசன் பாலர் பராமரிப்பு நிலைய ஒளிவிழாவில் பிரதம விருந்தினராக, அண்மையில் குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடிய மிருசுவில் St. Nicholas தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு. பீற்றர் துரைரத்தினம் அடிகளார் உரையாற்றும் போது தற்கால சூழ்நிலைக்கு ஏற்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம். இது எமது சமுதாயத்துக்கு மிகவும் தேவையாகும் எனக்குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் "சமூதாயத்துக்கு இன்றைய சூழலில் ஏற்ற தேவைகளை கிறிஸ்தவ சமுதாயம் கணிசமான அளவு நிறைவேற்றக் கூடிய நிலையில் இருப்பதால், எமது முக்கிய கடமை இதுவாகும். இருள் சூழ்ந்த சமுதாயத்துக்கு ஒளியேற்றும் ஆண்டவராக கிறிஸ்துவை எங்களின் வாழ்க்கையில் காட்ட வேண்டும். தென்னிந்திய திருச்சபையின் இத் சேவைகளுக்கு பாராட்ட வேண்டும்." என தமது உரையில் குறிப்பிட்டார்.

கிறிஸ்தவமும், இஸ்லாமும்

அமைச்சர் அஷ்ரஃப்

கப்பல் துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அல்-ஹாஜ் எம் எச் எம். அஷ்ரஃப் நத்தார் தினத்தை முன்னிட்டு, சகல் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கும் வாழ்த்துச் செய்திகளை தெரிவித்திருந்தார். அச்செய்தியில் இஸ்லாமிய சமயத்தையும் ஒப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தார்.

அச்செய்தியில், இஸ்லாமிய மத நம்பிக்கைகளுக்கும் கிறிஸ்தவமத நம்பிக்கைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. இத் தொடர்புகள் போதியளவு வெளிக் கொணரப்படாமை மிகவும் வருந்தத்தக்க தொன்றாகும். இஸ்லாமிய நம்பிக்கையின்படி இயேசு

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் தமிழ் வளர்சியில் கிறிஸ்தவ அருள் தொண்டர்களின் பங்கு

(18, 19 ஆம் நூற்றாண்டுகள்)

பத்தொன்பதாம் நூற்றாண்டு 'புரட்டஸ்தாந்து' எனப்படும் 'எதிரூன்றிய' தொண்டர்களின் காலம் எனப்படுகின்றது பல்வேறு தேசங்களிலிருந்தும் பல்வேறு தூது அணிகள் ஆசிய, ஆப்ரிக்க நாடுகளை நோக்கி வந்தன. இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்திலே பணியாற்ற 'அமெரிக்க கொங்ரிகேஷனல் மிஷனரிகள்' 1816 ஆம் ஆண்டில் வந்தனர். இவர்கள் 1833 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மதுரையிலும் பணியாற்றச் சென்றனர். இந்தத் தூது அணி 'வெளிநாட்டுத் தூது அணிகளுக்கான ஐக்கியத் திருச்சபைக் குழு' எனப்பட்டது. (United Church Board for Foreign Mission) இக் குழுவினர் தமிழ்மொழியைக் கற்பதில் மிக ஆர்வம் காட்டினர் தமிழ் கூறு நல்லுலகத்தைத் தமது பணிக்களமாகத் தெரிந்து கொண்டமையினாலும் கிறிஸ்தவத்தை உள்நாட்டு மயமாக்க வேண்டுமென்ற விருப்பம் கொண்டமையினாலும். பல்சலைக்கழகப் பின்னணி கொண்டதாக அந்த அமைப்பு இருந்தமையினாலும் அவர்கள் கற்பதில் சிறப்புக் கவனஞ் செலுத்தினார்கள.

அமெரிக்க நற்செய்தி அணியினர் ஒருநூற்றாண்டுகாலமாகத் தமிழ் மொழியைக் கற்று வந்தனர்தமிழ் மொழியைப் பற்றிய அவர்களுடைய கணிப்பு அவர்கள்பெற்ற வாய்ப்புக்களுக்கேற்றவாறு வெவ்வேறு காலத்தில்வெவ்வேறு மாதிரியாக விருந்ததெனத் தெரிகிறது. ''தமிழ் மக்கள் நூல்களே இல்லாதவர்கள்'' என்று ஆரம்பகால ஊழியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னொரு காலகட்டத்தில் தமிழ் மொழி முழுவதும் பொய் மதத்தில் அமிழ்ந்து கிடக்கின்றதென்று எழுதினார்கள் அம்மொழியைக் கொண்டு உயர்ந்த சிந்தனைகளைப் போதிப்பது அரிதென்றுங் குறிப்பிட்டுள்ளனர்!

''நேர்ப் பொருளாகவோ, வேறேதாவது தொடர்பினாலேயோ அஞ்ஞானத்தைப் போதிக்காத தமிழ்ப் பதத்தைக் காண்பதரிது. இம்மொழி முழுவதுமாகப் போலி மார்க்கத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. சிந்தனைகளையும் உணர்வுகளையும் சரி நுட்பமாக வழங்குஞ்சாதனமாக அதனைப் பயன்படுத்துவது இயலாததாகும்'' 2

ஆனால் அமெரிக்க மிஷனரிகள் அமைத்த வட்டுக்கோட்டைச் செமினரியின் இரண்டாவது அதிபராகப் பணியாற்றிய எச். ஆர். ஹொய்சிங்டன் என்பார். 1852 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து ஓரியண்டல் சொசைட்டியில் உரையாற்றும் பொழுது ''செந்தமிழைப் போலத் திணிவும் வளமும் நெகிழ்ச்சியும் இனிமையுமுடைய மொழி உலகில் இல்லை'' 3

என்று குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலே 1820 ஆம் ஆண்டு தொடக்கம் 1836 ஆம் ஆண்டுவரை பணியாற்றிய மைரன் வின்சிலோ தாம் தொகுத்த தமிழ்—ஆங்கில அகராதியின் முன்னுரையிலே தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்

''தமிழ் அதன் செய்யுள் வடிவத்தில் கிரேக்கத்தை விடப் பண்பட்டதும் நுண்ணியதுமாக இருக்கின்றதெனின் மிகையாகாது. அதன் இரு கிளைமொழிகளும். வேறுமொழிகளிலிருந்து பெற்றுக் கொண்ட செல்வங்களை இணைத்துக் கொண்டமையினால், இலத்தீன் மொழியை விடச் சொல்வளம் மிக்கதாகவிருக்கின்றது. ஆற்றலிலும். முழுமையிலும் மற்றெல்லா வாழும் மொழிகளிலும் பார்க்க ஆங்கிலத்தையும் ஜெர்மானியத்தையும் ஒத்திருக்கின்றது'' 4

தமிழ் மொழியைப் பற்றிக் காலக்கிரமத்தில் அமெரிக்க மிஷனரிகள் நன்கறிந்து கொண்டார்கள். தமிழ் மொழியின் இயல்பு பற்றி ஆரம்பத்திலே அவர்கள் கொண்டிருந்த எண்ணம் பின்னர் முற்றாக மாற்றமடைந்தது. ஆனால் மக்களிடையே வழங்கி வந்து தமிழிலக்கியங்களைப் பற்றி அவர்கள் சில முக்கியமான கருத்துக்களைப் பற்றிய அவர்களுடைய கருத்துகள் பல மாற்றமடையாமல் இருந்தனவென்பதனைக் கண்டு கொள்ளலாம். தமிழிலக்கியம் மதச் சார்பு நிறைந்தது. தமது மூதாதையரின் நூல்களையே தமிழ் மக்கள் போற்றி வருகின்றனர். தமிழில் உரை நடை சிறிதளவேனும் வளர்ச்சியடையவில்லை என்பன அவர்கள் தமிழ் நூன் மரபைப் பற்றி கூறிய முக்கியமான கருத்துக்களாகும்.

அமெரிக்க மிஷனரிகள் மிக முன்னேற்றமடைந்திருந்த மசாக்சுசெட்ஸ் (MASSACHUSETTS) மாநிலத்தில் இருந்து வந்தவர்கள். இந்த மாநிலத்தில் பகுத்தறிவுவாதம், கட்டுமீறிய கற்பனைவாதம், நூற்பணபாடு, விஞ்ஞான வாதம் என்பன நிறைவான பொலிவுடன விளங்கின. எனவே இச்சமுதாயத்திலிருந்து வந்த மிஷனரினிகள் தமிழிலக்கியத்திற் காணப்பட்ட குறைபாடுகளை நன்கு அவதானிக்க முடிந்தது. தமிழ் மக்களின் இலக்கிய நெறி ஆங்கிலேயே இலக்கியப் பண்புக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருப்பதனைக் கண்டு அமெரிக்க மிஷனரிகள் கவலை கொண்டனர்.

தமிழ் நூல் வளர்ச்சி முற்றிலும் புதியதானதொரு பாதையிலே செல்ல வேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாகவிருந்தார்கள்.

தமிழிலக்கியத்திலே. ஐரோப்பியருடைய வருகைக்கு முந்திய நான்கு நூற்றாண்டுகளிற் சமயச் சார்பு, தத்துவச் சார்பு, பழமை போற்றும் பணபு என்பனவே முக்கியமாக இருந்தனவென்பது தமிழிலக்கிய வரலாறு கூறும் உண்மையாகும். அமெரிக்க மிஷனரிகள் தமிழிலக்கியத்திலே காணப்பட்ட மதச் சார்பினைப் பற்றிப் பல விடங்களிற் குறிப்பிட்டுள்ளனர்.

''தமிழ் மக்களின் இலக்கிய மரபு பரந்துபட்டது. அது பொது மக்கள் மத்தியிற் பரவலாகப் படிக்கப்பட்டு வருகின்றதெனினும் அவை மக்களின் இயல்புகளைப் பாழடித்து விடுகின்றன. இதனால் இறைவனின் மக்கள் அவற்றிலிருந்து ஆரோக்கியமான சிந்தனைகளைப் பெறுவதும் வளர்ப்பதும் இயலாத காரியமாகி விடுகின்றது''6

தமிழ் நூல்கள் இத்தகைய நிலையில் இருப்பதாக எண்ணியதால் மாணவர்களுக்கு ஆங்கில நூற்பயிற்சியே பலனளிக்குமென்றும் மேலைத் தொண்டர்கள் கருதி அவ்வாறே எழுதியிருக்கிறார்கள்.

''மற்றச் சமயங்களின் நூல்களின் தவறான பாதிப்பினை நன்குணர்ந்து கொண்டவர்கள் ஆங்கில ஆசிரியர்களின் நூல்களைப் படிப்பது தமிழ் நூல்களைப் படிப்பதனைவிட நல்லொழுக்கத்திற்கு உதவியளிக்கும் என்பதனை மறுக்கவே மாட்டார்கள்'' என்பது அவர்கள் கருத்து.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே தமிழ் மாநிலங்கள் எங்கணும் இலக்கியத்தில் ஒருவகையான தேக்க நிலையும் செயற்கைத் தன்மையும் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே இப் பண்பு கூடுதலாகக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாறு பிரபந்தங்களையும் தொடர்நிலைச் செய்யுள்களையும்

பராயர் எஸ். ஜெபநேசன்

விதந்து போற்றும் காலத்தில் உற்பத்தியானது. இதுவே யாழ்ப்பாணத்து இலக்கியத்தின் செயற்கைத் தன்மைக்கு காரணமென்று சிவத்தம்பி கருதுகிறார்.

இதனாலேதான் மகாவித்துவான்களையும் உரையாசிரியர்களையும் அவர்கள் போன்ற பிறரையும் புலவர்கள் என்று கொள்ளும் மரபு தோன்றிற்று ஆரம்பத்திலே இப்பண்புகள் காணப்பட்டதனாலே தான், அந்தப் பாரம்பரியம் போற்றப்படுகிறது. சமூக மட்டங்களில் அத்தகைய புலவர்கள் இன்றும் போற்றப்படுகிறார்கள், தலைவப்படுகிறார்கள்''8

இத்தகைய தேக்கநிலையை அவதானித்த மிஷனரிகள் உரை நடையில் ஒரு பக்கந்தானும் எழுதத் தெரியாத எத்தனையோ பண்டிதர்கள் செயற்கையாகச் சில கவிகளை இயற்றக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் நூல்களில் உரை நடை அருகிக்காணப்பட்டதும் மேலைத்தொண்டர்களுக்குப் பெருங் குறையாகப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ் வளர்ச்சியடையாமல் இருந்தமைக்கு அச்சக வசதியின்மையே காரணம் என்பது அறிஞர்கள் ஒப்பிய முடிவு. தமிழ் மக்கள் நல்ல அச்சு வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது வருடங்கள் ஆயினவெனத் தெரிகின்றது. 1577 ஆம் ஆண்டு இயேசு சபையைச் சேர்ந்த கொன்சல்வேஸ் முதன் முதலாக கேரளத்திலுள்ள கொல்லம் எனுமிடத்தில் தமிழ் அச்செழுத்துக்களை உருவாக்கினார். ஆனால் இந்த அச்சகத்திலிருந்து பல பிரதிகளை வேண்டியவாறு பெற முடியவில்லை. 1713 இல் சீகன்பால்குவின் அச்சகம் தரங்கம்பாடியில் இயங்கத் தொடங்கியது. ஆனால், இந்தியாவில் ஆளுகை புரிந்த ஐரோப்பிய அரசுகள் 1835 வரை சுதேசிகள் அச்சகம் அமைப்பதனை அனுமதிக்கவில்லை. தமிழிலக்கியத்தில் அச்சகத்தின் தாக்கம் 1835 ஆம் ஆண்டிற்குப் பின்னரேயே ஏற்பட்டதென்று சமில் சுவலெபில் தெரிவித்துள்ளார்.9

அச்சக வசதியைப் பெறும்வரை தமிழ் மக்கள் உரைநடையை வளர்த்துக்கொள்ளவில்லை. தமிழ் உரைநடையின் நிலைபற்றி அகராதி தொகுத்த மைரன் வின்சிலோ கூறியவை கவனிப்புக்குரியவையாகும்.

''அதன் உரைநடை, இன்னும் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றது. நுண்ணிய அறிவு வாய்க்கப் பெற்றவர்கள் அதனைச் சரியான முறையில் வடித்தெடுப்பார்களெனின் மிகுந்த பலன் கிடைக்கும். செய்யுளைச் சொன்ன மாத்திரமே எழுதவல்ல பல சுதேச அறிஞர்கள். ஒரு பக்கந்தானும் சரியான உரைநடை எழுதமுடியாதிருக்கின்றனர்''10

தமிழ்ப்புலவர்கள் உரைநடை எழுதுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டனர் என்பதற்குப் பி வருஞ் சம்பவம் சான்று பகருகின்றது.

சொற்செறிவும் பொருட்செறிவும் ஒசை நயமுள்ள 6000 விருத்தங்களாக விஷ்ணு புராணத்தைச் செறை நூற்றாண்டிற் சுபபராய ஐயர் என்பவர் தமிழில் மொழி பெயர்த்தார். எனினும் முன்னுரை எழுத அவர் மிகவுந்துயரப்பட்டாரம் எட்டுநாட்கள் முயன்று, ஒரு வாறாக ஒன்றரைப் பக்க அளவிலே தம் முன்னுரையை அவர் எழுதி முடித்தாராம்''11

இவ்வாறு சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்மொழியின் நிலைபிருப்பை அவதானித்த அமெரிக்க மிஷனரிகள் உரை நடையை வளர்க்க முயன்றனர். அவர்கள் அமைத்த உயர்கல்விப் பீடமான வட்டுக்கோட்டை தேவியல் கல்லூரி (செமினரி) தமிழ் உரைநடை வளர்ச்சியிலே பெரும் பங்காற்றியது. ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, கரோல் விசுவநாதபிள்ளை, சி. வை தாமோதரம் பிள்ளை, வைமன் கதிர்வேற்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை ஆகியோர் இந்தத் தேவியல் கல்லூரியில் கற்று அரங்கேறி, சிறந்த உரைநடை நூல்களை எழுதினார்கள். அவர்கள் எழுதிய சில நூல்கள் இன்றும் சிறந்த உரைநடைக்கு எடுத்துக்காட்டுகளாக வினங்குகின்றன.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி

உதயதாரகை

ஆதின காரியாலயம் வட்டுக்கோட்டை
Estd 1841
மலர்: 158 3 - 1 - 1997 இதழ்: 1

புத்தாண்டு நற்செய்தி

அறியாத வருடத்தின் ஆரம்பத்தில் நாம் நிற்கிறோம். 1997 ஆம் ஆண்டில் நாம் ஒருபோதும் இந்த வழியாக நடந்து போனதில்லை. ஆனாலும் அறியாத இடத்தில் ஆரம்பத்தில் சந்திக்கும் கடவுள் நம் முன்னால் அங்கே நின்றுகொண்டிருக்கிறார். அறியாத ஓரிடத்தின் ஆரம்பத்தில், யாக்கோபு, வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை, கடவுளின் கண்காணிப்பிலிருந்த நாட்டை, ஆபிரகாம் ஈசாக்கும் நடந்து திரிந்த நாட்டை விட்டு வந்திருந்த யாக்கோப்பினிடத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள்.

நான் உன்னோடே இருப்பேன்—நீ போகிற
இடத்திலெல்லாம் உன்னைக் காத்துக்
கொள்வேன்—இந்த தேசத்துக்கு
உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்—நான்
உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக்
கைவிடமாட்டேன்'' [ஆதி. 28:15]

இதிலிருந்து கடவுளின் விசேட பண்புகள் தெரியவருகின்றன.

அறியாத இடத்தின் ஆரம்பத்தில் சந்திக்கும் கடவுளாக யாக்கோபுவுக்கு கடவுள் காட்சி தருகிறார். யாக்கோபிற்குத் தாம் போகும் இடத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அறியாத ஓர் இடத்திற்குள் செலலும் பொழுது அக்கடவுள் அங்குமிருப்பாரா என்ற சந்தேகம் அவர் உள்ளத்திலிருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் நித்திரை கலைந்து எழுந்தவுடன் ''உண்மையாகவே கடவுள் இவ்விடத்திலிருக்கிறார் இதை நான் அறியாதிருந்தேன்'' என்றார். ஆம்: 1997 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அறியாத இடத்தின் ஆரம்புத்தில் சந்திக்கும் கடவுள் அங்கே நின்றுகொண்டிருக்கிறார் யாக்கோபிற்கும் கடவுளுக்குமிருக்கும். தொடர்பைக்காட்டும் ஏணி — அதன் உச்சியிலே கடவுள் அதில் தேவதூதர்கள் ஏறுகிறார்கள், இறங்குகிறார்கள். அதேபோல கடவுளுக்கும் எமக்கும் இருக்கும் தொடர்ந்த உறவைக் காட்டும் ஏணியின் உச்சியிலே ஆண்டவர் இயேசு நிற்கிறார் — அதிலே அவருடைய திருப்பணியாற்றும் தூதர்கள் எமக்குப் பணியாற்ற 1997 ஆம் ஆண்டிற் தயாராயிருக்கிறார்கள், ஆகையால் அஞ்சவேண்டாம். நான் உன்னோடே இருப்பேன் எனக் கடவுள் வாக்குக் கொடுக்கிறார்.

அறியாத இடத்தின் ஆரம்பத்தில் சந்திக்கிறவர் மட்டுமல்ல, உடன் படிக்கையும் செய்கிறவர் கடவுள் யாக்கோவுடன் தன்னை இணைத்துக் கொள்கிறார். இது யாக்கோபின் தகுதியினிமித்தம் செய்து கொண்ட உடன் படிக்கையுமன்று, கடவுளின் அளவற்ற கிருபை, எத்தனும் சுயநலக்காரணுமாகிய யாக்கோபுவுடன் தன்னை இணைத்துக் கொள்கிறார். தொடர்ந்து ''நான் ஆபிரகாமின் கடவுளும், ஈசாக்கின் கடவுளும், யாக்கோபின் கடவுளுமாகிய உன் பிதாக்களுடைய கடவுளாயிருக்கிறேன்'' என்றார். (யாக் 3:6) இனி அவர் யாக்கோபிற்கும் கடவுள் யாக்கோபு அவரைத் தெரிந்து கொள்ளவில்லை. கடவுளே, முன் வந்து, முதலில் தெரிந்து கொள்கிறார்.

1997 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உங்களுடன் உடன்படிக்கை செய்யும் ஒரு கடவுளாக சந்திக்க நின்று கொண்டிருக்கிறார். அத்துடன் மாற்றியமைக்கும் கடவுளாகவும் விளங்குகின்றார். எத்தனும் சுயநலக்காரனுமாகிய யாக்கோபையும் அறியாத இடத்தில் சந்தித்து, அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டு அவரை மாற்றியும் அமைக்கிறார். லாமானுடைய வீட்டிலே யாக்கோபு இருபது ஆண்டுகள் இருந்தார் அக்காலம் கடவுள் அவரை மாற்றி அமைத்த காலம். அவருடைய பெயர் 'இஸ்ரவேல்' என்று மாற்றி அமைக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு போரை மாற்றி அமைக்கும் ஆண்டாபிருக்கட்டும். அறியாத இடத்தில் சந்திக்கும் கடவுள், அவரோடு தம்மை இணைத்துக் கொண்டு அனைவரையும் மாற்றி அமைக்க ஆயத்தமாயிருக்கிறார். ''நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை'' என்று உங்களைச் சந்தித்து, உடன் படிக்கை செய்து கொண்டு, மாற்றி அமைக்கப்போகும் கடவுள் சொல்கிறார்.

1997 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறோம். எம்மாவூருக்கு வழிநடந்த சீடர்களுடன் சேர்ந்து நடந்த ஆண்டவர் இவ்வாண்டின்வழி நம்முடன் சேர்ந்தே நடக்கட்டும். அவர் சேர்ந்து நடக்கும் பொழுது, வாழ்க்கையின் சிக்கல்கள் அவிழ்கின்றன. உள்ளத்தில் தெளிவு பிறக்கிறது. நமது ஆன்மா கொழுந்துவிட்டு எரிகிறது.

இடம்பெயர்வும் நாமும்

நாம் ஒரு முறை 1995 ஆம் ஆண்டைப் பின் நோக்கிப் பார்ப்போம். எப்படி நாம் நத்தாரைக் கொண்டாடினோம். சொந்தம் பாராட்ட எமது உறவினர் எங்கிருந்தனர்? ஆர்ப்பரித்து மகிழ்வு கொண்டாட எத்தனை நண்பர்கள் எம்மைத் தேடிவந்தனர்.

ஒரே இராத்திரியில் அகதிகளாக்கப்பட்டோம். இரவில் அக்கினிஸ்தம்பம், பகலில் மேகஸ்தம்பம் இவைகளுக்குப் பதிலாக அடைமழையும் நடுக்கமும் தான் துணையானது அதில் நனைந்து வயது முதிந்தவர்கள் மட்டும் அல்ல இளைஞர் யுவதிகள் கற்பினித்தாய்மார் ஏன் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளும் தான். தங்களுக்கு என்று ஒரு அரசு இருக்கின்றது நீதியும் நியாயமும் சுதந்திரமும் இருக்கின்றது அங்கே எமது பெயர்களை பதிவு செய்து கொள்வோம் என்று அங்கலாய்ப்புடன் நாவற்குழியை கடக்கவில்லை. பாலும் தேனும் ஓடும் கானான் நாட்டை நோக்கி எமது பயணம் அமையவில்லை. ஏனெனில் குடிக்கக் கூட ஒரு துளி நீர் எம்மில் பலருக்கு கிடைக்கவில்லை. நாவற்குழி வெளியில் தென்னை மரங்கள் எல்லாம் இள நீர் கொடுப்பதற்கு பதிலாக கண்ணீரை தான் எமது மக்களுக்கு கொடுத்தது. ஏனெனில் மழைத் துளிதான் எமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலாக மாறியது.

உரோமர் கால பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தும் அநேகர் வழிதப்பி போனார்கள். சொந்த மும் இல்லை, பந்தமும் இல்லை. வெற்றி முரசுக்கு பதிலாக போர் முரசைத்தான் கேட்டோம். எங்களுக்கு வழிகாட்ட தாரகைகள் வரவில்லை ஷெல் ஓசைகளும் துப்பாக்கி ரவைகளும் தான் வானத்தில் பறந்தது. அவைகள் எங்களுக்கு வழிகாட்ட வரவில்லை படுகுழியை காட்டவே வந்தது. செல்லும் இடம் தெரியாது வந்த இடத்து சொந்தங்களும் எங்கேயோ தெரியாது. காலாகாலமாக கட்டிக்காத்த காணி வீடு வாசல் எங்கே? வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சேர்த்து வைத்த சொத்துக்கள் எங்கே? யாருக்காக சேர்த்து வைத்தோம்.

எல்லோருக்கும் ஒரே நாமம் கொடுக்கப்பட்டது. ''தாவீதின் வம்சம்'' என்று ''அகதிகள்'' ஒரே இரவில் நாங்கள் அகதிகளாக்கப் பட்டோம் மாரியன்னையை சுமப் பதற்கு யோசெப்பிற்கு ஒரு கழுதை என்றாலும் அன்று கிடைத்தது ஆனால் எமது சமூகத்தில் சிலகற் பினிகளோ ''சான்ஸ் ஏற முழம் சறுக்கிய'' வரலாறும் உண்டு. கண் மடலோடு மடல் மூடுவதற்கு மாட்டுக் கொட்டிலும் கிடைக்கவில்லை. தென்னை மரத்தடியும் கிளாலி கடல் ஏரியும் தான் நடுக்கத்தின் மத்தியில் ஒரு இருப்பிடத்தை கொடுத்தது. இரண்டுவயதிற்குட் பட்ட சிசுக்களை கொலை செய்வதற்கு படைகளை நகர்த்தினான் அன்று ஏரோது—எங்களில் சிலரை அடிமைய் படுத்த அடக்கி ஒடுக்க படைகள் நகர்த்தப்பட்டன.

அந்தப் பொழுதில் எல்லோரின் மனதிலும் உதித்த ஒரே ஒரு வார்த்தை எக்கு விடுதலை கிடைக்காதா? கிறிஸ்துவே எங்கள் உள்ளங்களில் பிறக்க எங்களை முற்று முழுவதுமாக உமக்கு ஒப்படைக்கின்றோம் எங்களை மீட்டருளும் என்று எல்லோரும் ஏக சிந்தனையுடன் கால்போன வழியே நடந்தோம். பசி எம்மை வாட்டியது. ஆனாலும் ஆண்டவரின் நாமத்தை உச்சரிக்க மறக்கவேயில்லை.

முன்னர் தொழுது கொள்ள பெரிய பெரிய ஆலயங்களுக்கு சென்றோம் ஆலயத்தில் முதன்மை

சின்னவன் ஸ்ரீபன்
சமூகவியல் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக் கழகம்

யான இடத்தில் இருக்க பல முறை முயன்றோம் ஆனால் கடந்த வருடம் எமக்கு கிடைத்த தொழுகை கூடம் மரத்தடி ஒன்றேதான்.

1996 ஆண்டில் கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தமாக இருக்கும் நாம் எப்படியான சிந்தனையுடன் எவ்வாறு திட்டங்கள் போட்டிருக்கின்றோம். உண்மையிலேயே கடந்த வருடம் எங்களிடம் ஒன்றுமே இல்லை ஆன்மிக பாதை எமக்கு முன் இருந்தது. எல்லோரும் ஏகமனதுடன் எமக்கு விடுதலையைத் தாரும், எங்களது உள்ளத்தில் உமது ஆவியை ஊற்றியருளும் என்று கிறிஸ்துவின் பிறப்பை எதிர் நோக்கினோம்.

இன்றும் வன்னியில் மக்கள் மரத்தடியிலும் மழைக்குளிரிலும் வறுமையிலும் வாடுகின்றனர். எம் மத்தியில் பலர் இல்லை. காணாமல் போகின்றனர். மனித சுதந்திரங்கள் பறிக்கப்படுகின்றது. சொந்த இடங்களில் சுகபோகமாக வாழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் நூலகம்

சிறார் சோலை

அன்பான தம்பி தங்கைகளுக்கு:-
தாரகை அண்ணாவின்
புதுவருட வாழ்த்துக்கள்!

அன்பான தம்பி தங்கைகளே!

அன்பான தம்பி தங்கைகளே 1996 ஆம் ஆண்டு பல அனுபவங்களுடன் கடந்து போயிற்று அந்த ஆண்டில் எம்மை வழி நடத்திய ஆண்டவர் வழி பிறந்திருக்கும் புது வருடத்துள்ளும் எமை வழி நடத்திச் செல்ல இறை அருளை வேண்டுகிறேன்.

தம்பி தங்கைகளே – நாம் பல வேளைகளிலும் மற்றவர்களிடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்கிறோம். ஆனால் மற்றவர்களுக்கு செய்வதற்கோ மறந்து போகிறோம். ஒரு கிராமத்தில் ஒரு பால்காரியும், வெதுப்பக உரிமையாளனும் வாழ்ந்து வந்தார்கள். பால்காரி ஒரு இறாத்தல் வெண்ணெய் நாள்தோறும் வெதுப்பக உரிமையாளனுக்குத் தருவதாகவும், வெதுப்பக உரிமையாளன் ஒரு இறாத்தல் பாண் நாள்தோறும் பால்காரிக்கு தருவதாகவும் இருவரும் உடன்பட்டிருந்தனர். இது பல மாதமாக நடைபெற்று வந்தது ஒரு நாள் வெதுப்பக உரிமையாளனுக்கு பால்காரி சரியான நிறையில் வெண்ணெய் தருகிறாளா? எனும் சந்தேகம் பிறந்தது வெண்ணெயை நிறுத்துப் பார்க்கையில் ஐம்பது கிராம் குறைந்தது. பால்காரிக்கு எதிராக வழக்குத் தொடுத்தான.

வழக்கின் போது பால்காரி "ஐயா என்னிடம் வீட்டில் ஒரு இறாத்தல் படி இல்லை. வெதுப்பக உரிமையாளர் தருகிற பாணை வைத்து நிறுத்துத்தான் நான் வெண்ணெயை அவருக்கு வழங்கி வந்தேன்" என்று கூறினாள் நீதிபதி பாணை நிறுத்த போது பாணின் நிறை ஐம்பது கிராம் குறைந்து இருந்தது. வெதுப்பக உரிமையாளன் தண்டிக்கப்பட்டான்.

பார்த்தீர்களா? நாமும் மற்றவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறோமோ, அதை மற்றவர்களுக்கு செய்வதில் முன்நிற்போமா?

சிறுவர் சிரிப்பு

ராமு:- "கல்யாண வீட்டிலும், மரண வீட்டிலும் ஏன் வாழைமரம் கட்டுவார்கள்?"
சோமு:- (சற்று யோசித்து விட்டு) "தெரியாதே....."
ராமு:- "கட்டாவிட்டால் வாழைமரம் விழுந்து விடுமே..."
சோமு:- ?!?!?!!

-சதீஸ் டானியல்-

இவ்வாரப் புதிர்

சென்றவாரப் புதிரின் விடை

முதலில் ஆட்டைக் கொண்டு வந்து வீட்டில் விட்டு விட்டு, பின்னர் கீரையைக் கொண்டு வந்து வீட்டில் வைத்து விட்டு, பின்னர் ஆட்டைத் திரும்பவும் சந்தைக்கு கொண்டுபோய் விட்ட கையோடு புலியைக் கொண்டுவந்து வீட்டில் விட்டு விட்டு பின்னர் ஆட்டைக் கூட்டி வரலாம்

இவ்வாரப் புதிர்:-

அருகிலோ, கீழேயோ, எத்தனை 8 களையும் போவிக்கலாம். கூட்டும்போது ஆயிரம் வரத்தக்கதாக கூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அது எவ்வாறு? சரி தம்பி தங்கைகளே! – சரியான விடையை எழுதி அனுப்புங்கள். தெரியாதவர்கள் அடுத்த இதழை எதிர்பாருங்கள்.

மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம் கூறி விடைபெறுவது
என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

அன்பின் வாசகர்களுக்கு!

மீண்டும் நமக்கு ஒரு புதிய ஆண்டைத் தந்த தேவனை ஸ்தோத்தரிப்பதோடு, வாசகர்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த புதுவருட வாழ்த்துக்களை "உதயதாரகை" தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறது.

உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் உன் வலது கையைப் பிடித்து; "பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்."

ஏசாயா 41:13

ஆ-ர்

வாசகர் பகுதி

உதயதாரகையின் வளர்ச்சிகண்டு மன மகிழ்ச்சி அடைபவரில் நானும் ஒருத்தி — நித்திய இளமை பெற்று விளங்கிட வேண்டும். உதயதாரகை அதற்கு இறை அருளை யாசிக்கிறேன்.

திருமதி. S. A சிகாமணி
அராலி வடக்கு.

கிறிஸ்தவ...

கிறிஸ்து நாதரின் பிறப்பு, இறைவனி அற்புதங்களில் ஒன்றாக நம்பப்படுவது மட்டுமல்லால் இறைவனால் அனுப்பப்பட்ட விசேட தூதுவர்களில் ஒருவராகவும் கருதப்பட்டு முஸ்லிம் சமூகத்தினால் மதிக்கப்படுகின்றனர்.

இயேசு கிறிஸ்து (ஈஸா அலை) அவரில் நம்பிக்கை இல்லாத எவரும் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது. அல்-குர் ஆனில் இயேசு கிறிஸ்து அவர்களைப் பற்றி நிறையப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மதத்துக்கும், கிறிஸ்தவ பாதிரிமாருக்கும் விசேட மதிப்பை வழங்கும்படி இஸ்லாம் வற்புறுத்தியுள்ளது. இந்த அடிப்படைகளில் கிறிஸ்தவர்களும முஸ்லீம்களும் சிந்திக்க முடியுமென்றால், இருந்து வந்ததை விடவும் கூடுதலான ஒரு புரிந்துணர்வை இரண்டு மதப் பிரிவினருக்குமிடையில் ஏற்படுத்த முடியும். சிலுவை யுத்த காலத்திலிருந்து இஸ்லாம் சரியானதா? கிறிஸ்தவம் சரியா? என்ற விவாதத்தில் ஈடுபட்டதனால் இரண்டு நம்பிக்கைகளையும் உடைய சமூகங்களுக்குமிடையேயுள்ள இடைவெளி அதிகரித்துள்ளது.

இந்த நிலையை மாற்றி இரண்டு மதங்களுக்குமிடையிலான பொதுவான விடயங்களில் கருத்தொருமைப்பாடு காண முடியுமென்றால் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் இன்னும் புரிந்துணர்வுடன் நடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை சர்வதேச மட்டத்தில் ஏற்படும்.

குறிப்பாக இலங்கையிலே சிறுபான்மையாக இருக்கின்ற இவ்விரு சாராரும் தங்களின மத நம்பிக்கையின் அடிப்படையில் தங்களின் புரிந்துணர்வுகளை அதிகரிக்க முடியுமென்றால் கிறிஸ்தவர் முஸ்லீம் நட்பை இன்னும் மேலும் வலுப்படுத்துவதோடு இன்று நாட்டிலே உள்ள அமைதியின்மையை இல்லாமல் செய்து நாட்டிலே நாம் அனைவரும் தேடிக் கொண்டிருக்கும் சமாதானத்தை விரைவில் பெறுவதற்கு இது உதவும். இந்த புதிய சிந்தனைகளுடன் கிறிஸ்மஸ் பண்டிகையில் புதுவருடத்தின் மகிழ்ச்சியிலும் பங்கு கொள்வோமாக.

முதலாவது சிரார்த்ததினம்

அமரர் ராஜு அவர்களை அவர் 1958ல் நீர் கொழும்பில் கடமையாற்றிய காலம் தொடக்கம் நான் நன்கு அறிவேன். நாம் இருவரும் சாவகச்சேரித் திருச்சபையிலும் ஏனைய பொது நிறுவனங்களிலும் பிரதான பதவிகளில் அங்கம் வகிக்கும் பொழுது எமது உறவு மேலும் மேலும் நெருக்கமடைந்தது.

இவர் ஒரு சிறந்த உடற்பயிற்சியாளன் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக் கூடியவர். மனதில் எதனையும் மறைத்து வைத்திராது நேரே கூறக் கூடிய துணிச்சலுள்ளவர். இவர் தாங்கு அயராத உழைப்பினால் கலால் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றார். அமரர் ராஜு எங்கள் திருச்சபையில் ஓர் சிரேஷ்ட அங்கத்தராவர். பல காலம் செயற் குழுவில் வெவ்வேறு பதவிகளில் அரும் பெருந் தொண்டாற்றினார். பரிகாரராகவும் ஆதீன சங்கப் பிரதி நிதியாகவும் சேமக் காலை மேற்பார்வையாளராகவும் சிறந்த பணியாற்றினார். திருச்சபை வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார். காலம் தவறாது எமது ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு வந்தார் எமது சபை ஆற்றலும் துணிவும் விசுவாசமும் முள்ள ஒரு நண்பரை இழந்து விட்டது.

இடம்பெயர்வு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை சுதந்திரம் என்ற போர்வைகளில் அநேகர் அநியாயமாக நசுக்கப்படுகின்றனர், கொலை செய்யப்படுகின்றனர், நாங்கள் என்ன செய்கின்றோம். "ஆபத்தில் இருப்பவன் என் நண்பன் வறுமையில் வாடுபவன் சகோதரன்" என்ற மனநிலையுடன் பிறனது துக்கத்தில் பங்கு கொள்கின்றோமா? கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தப் டும் நாம் எவ்வாறு அவருக்கு பாதைகளை செவ்வை பண்ணுகின்றோம். ஆண்டவர் எம் உள்ளங்களில் பிறக்க வேண்டுமானால் ஒன்றுமில்லாமையில் எம்மை முழுமையாக அவரிடம் ஒப்புவிடக்க வேண்டும். ஏனெனில் இல்லாமையிலும் முழுமையை கொடுக்கின்ற தேவன் நம்மோடு இருக்கின்றார்.

தென் இந்திய திருச்சபை யாழ ஆதீனம் சிறுவர் இல்லங்கள் பாதுகாவலர் (WARDENS) தேவை தகமை

1) கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும்
2) குறைந்த பட்சம் க. பொ. த. சாதாரண தரம் அல்லது இணையான சித்தியெய்தியிருத்தல் வேண்டும்
3) பிள்ளைகளுடன் இருந்து அவர்களை மேற்பார்வை செய்து, இல்லத்தின் பொறுப்புகள் யாவையும் ஏற்று நடத்தும் ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டும்

விண்ணப்ப முடிவு:- 15-01-97

திட்டப் பணிப்பாளர்
ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

இப்பத்திரிகை வடடுக்கோட்டை ஆதீன காரியாலயத்தில் உள்ள அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர், G. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.